<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,</u>
<u>இலுப்பூர்</u>

**முன்னிலை: திருமதி. சாதத்துணிஷா, பி.ஏ. பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.
2025 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29 ம் நாள் வெள்ளிக் கிழமை

**<u>புதிய இடை நிலை மனு எண். 6/2025</u>**
**<u>in</u>**
**<u>அசல் வழக்கு எண்.242/2019</u>**

சண்முகம் மற்றும் பலர் ..... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

... எதிர் ...

இலுப்பூர் ஸ்ரீ முனியப்பன் கோவில்
குலதெய்வமாக கொண்ட செல்லப்பன்
செட்டியார் உறவின்முறை வழிபாட்டு
அறக்கட்டளைக்காக அதன் அறங்காவலர் முறையில் K.S. மணி

..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது என் முன்பாக 29.08.2025–ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.E. முனியப்பன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.D.பாபு அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது அசல் வழக்கில் கடந்த 24.07.2022 ம் தேதியில் மனுதாரர்கள்/1,3 முதல் 6 வரை பிரதிவாதிகளுக்கெதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கில் எதிர்வதுக்குரை தாக்கல் செய்து அசல் வழக்கினை மேல்நடத்த உத்தரவிட வேண்டி

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நம்பர் வழக்கில் கடந்த 04.07.2022ம் தேதியன்று தங்களது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டி வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், இந்நிலையில் தாங்கள் மேற்படி வாய்தா தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய தயாராக இருந்த நிலையில் தங்களது உறவினர் ஒருவரின் இறுதி சடங்கிற்காக வெளியூர் சென்றிருந்த நிலையில், தான் தனது வழக்கறிஞரை சந்தித்து விபரம் தெரிவிக்க இயலாத காரணத்தினால் மேற்படி வழக்கில் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி தெதியில் தங்களது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே கடந்த 04.07.2022ம் தேதியில் தங்களது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்ற காரணத்திற்காக மேற்படி வழக்கில் தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து அசல் வழக்கினை மேல்நடத்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரை:**

மனுதாரர்/ பிரதிவாதி தாக்கல் செய்த மனுவானது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யவேண்டியது ஆகும் என்றும், மனுதாரர்/ பிரதிவாதிகள் மனு பொய், பிராட்டு, மோசடி சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அறுகதையுடையது என்றும், வழக்கு ஒருதலைப்பட்சமாக உத்தரவிடப்பட்டு 1085 நாட்கள் கழித்து ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி மனுதாரர்/பிரதிவாதிகள் மனு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர் மனுவில் 04.07.2022–ம் தேதி துக்க

நிகழ்ச்சிக்கு வெளியூர் சென்றுள்ளதாக கூறுயுள்ளார் என்றும், ஆனால், மீதமுள்ள 1085 நாட்களுக்கான காரணத்தை தெரிவிக்கவில்லை என்றும், மனுதாரர் வேண்டுமென்றே அலட்சியாக எதிர்மனுதாரர்/வாதியை அளக்களிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் எதிர்வழக்குரையை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டு விவாத உரைக்காக வாய்தா போடப்பட்ட நிலையில் ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரியிருப்பது நீதியின் நலனுக்கு ஏற்புடையதல்ல என்றும், எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

**<u>3. பிரச்சனைக்கான தீர்வு</u>**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இந்த மனு கடந்த 04.07.2022ம் தேதியன்று தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரரை நீக்கல் செய்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க ஆட்சேபணை தெரிவித்துள்ள போதிலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுவுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதை பார்க்கும் போதும் மற்றும் மனுவில் கூறியுள்ள காரணங்களை கருத்தில் கொண்டும், மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் விதமாக இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இவ்வழக்கில் ஏற்பட்டுள்ள கால விரையத்தை ஈடு கட்டும் வகையில் எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் இந்த மனுவினை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக மனுதாரர்கள்/பிரதிவாதி செலவு தொகையாக ரூ.1000/–

எதிர்மனுதாரர்/வாதிக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 11.09.2025.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29–ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.08.29 16:23:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.08.29 16:24:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்**

**முன்னிலை: திருமதி. சாதத்துணிஷா, பி.ஏ. பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

2024 ம் ஆண்டு ஜீன் திங்கள் 28 ம் நாள் வெள்ளிக் கிழமை

**புதிய இடை நிலை மனு எண். 3/2024**

**அசல் வழக்கு எண்.10/2023**

1. அடைக்கயி
த/பெ. லேட். வேலன்,
இலுப்பூர் தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம். ..... வாதி/எதிர்மனுதாரர்

... எதிர் ...

1. பேரூராட்சி தலைவர் அன்னவாசல்
2. பேரூராட்சி நிர்வாக அலுவலர் அன்னவாசல்
3. வருவாய் வட்டாட்சியர் இலுப்பூர்
4. மாவட்ட ஆட்சி தலைவர்

புதுக்கோட்டை மாவட்டம். ..... பிரதிவாதிகள்/மனுதாரர்கள்

இம்மனுவானது 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிரான ஒருதலைப்பட்ச உத்தரவை நீக்கல் செய்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள் – 26.04.2024
மனுவிற்கான நீதிமன்ற கட்டணம் – ரூ.20/– செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனுவானது என் முன்பாக கடந்த 24.06.2024–ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது பிரதிவாதிகள்/மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் அவர்கள் முன்னிலையாகியும், வாதி/எதிர்மனுதாரர் கற்றறிந்த வழக்குரைஞர் திரு M.பழனியப்பன், அவர்கள்

முன்னிலையாகியும், இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

<u>உத்தரவு ஆணை</u>

1.முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2.செலவு தொகை இல்லை.

2024 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 28 ம் நாள் என்னால் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் வைத் வழங்கப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கீரனூர்**

**முன்னிலை - திரு.எம். ஜியாவுர் ரகுமான், பி.ஏ.,பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, கீரனூர்.

2019-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 8-ம் நாள் வியாழக் கிழமை

**2050 திருவள்ளுவராண்டு விகாரி வருடம் ஆடித் திங்கள் 23-ம் நாள்**

**வழக்கிடை விண்ணப்ப எண்.524/18**

**அசல் வழக்கு எண். 56/18**

R.சூசை அமலதாஸ், வயது சுமார் 64
த/பெ.ராயப்பன்
எண்.95 அண்ணாநகர், மாத்தூர்,
குளத்தூர் தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம். ... மனுதாரர்/வாதி

**//எதிர்//**

1. A.நிர்மலா மேரி, வயது சுமார் 60
   க/பெ.ஆரோக்கியமேரி,
   அபிராமிநகர், பர்மா காலனி,
   குண்டூர் அஞ்சல், திருச்சி - 7
2. பிரியா, வயது சுமார் 30
   த/பெ.அய்யாவு
   எண்.69 - A, அண்ணாநகர் 5ம் வீதி,
   மாத்தூர், குளத்தூர் தாலுகா,
3. உதவி மின் பொறியாளர்
   தமிழ்நாடு மின்சார வாரியம்
   மாத்தூர்
4. உதவி நிர்வாக பொறியாளர்,
   தமிழ்க மின்சார வாரியம்
   செயல்படுத்துதல், பராமரித்தலும்,
   மாத்தூர்.
5. நிர்வாக பொறியாளர்,
   தமிழ்நாடு மின்சார வாரியம்,
   (செயல்படுத்துதல், பராமரித்தலும்)
   கீரனூர் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

மனுதாரர்/வாதி 3 முதல் 5 உத்தேச எதிர்மனுதாரர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்க உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)-ன் கீழ் மனுதாக்கல் செய்துள்ளார்.

**மனு முன்னிடப்பட்ட நாள் - 19.07.2018**

**இந்த மனுவிற்கு நீதிமன்ற கட்டணமாக ரூ.20/- செலுத்தப்பட்டுள்ளது.**

இம்மனுவானது இறுதியாக 22.07.2019 அன்று என்முன்பாக விசாரணைக்கு வந்ததில் மனுதாரர்/வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.R.ராமையா அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.C.C.செல்வராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றாதரப்பினராக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, வழக்காவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்பாணைக் கட்டளை**

1. இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது என்றும்,
2. 2ம் உத்தேச எதிர்மனுதாரரை 2ம் பிரதிவாதியாக வழக்கில் சேர்க்க உத்தரவிட்டும்,
3. 3 முதல் 5 உத்தேச எதிர்மனுதாரர்கள் வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்பதால் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க கோரியுள்ள பரிகாரத்தை தள்ளுபடி செய்ய உத்தரவிட்டும்,
4. செலவுத்தொகை இல்லை என்று கட்டளையிட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

2019-ம் ஆண்டுஆகஸ்ட் திங்கள் 8-ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரை வைத்து வழங்கப்படுகிறது.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**கீரனூர்.**